**செய்தி வெளியீடு எண்: 170** **நாள்: 27.02.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (27.2.2019) தலைமைச் செயலகத்தில், ஜம்மு – காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில் மத்திய ரிசர்வ் காவல் படையினர் மீது தீவிரவாதிகள் நிகழ்த்திய பயங்கர தாக்குதலில் உயிரிழந்த மத்திய ரிசர்வ் காவல் படைவீரர் திரு.ஜி.சுப்ரமணியன் அவர்களின் மனைவி திருமதி கிருஷ்ணவேணி அவர்களுக்கும், திரு.சி.சிவசந்திரன் அவர்களின் மனைவி திருமதி காந்திமதி அவர்களுக்கும் கருணை அடிப்படையில் அரசு வேலைக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

ஜம்மு – காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில் மத்திய ரிசர்வ் காவல் படையினர் மீது தீவிரவாதிகள் நிகழ்த்திய பயங்கர தாக்குதலில், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், சவலப்பேரி கிராமத்தைச் சேர்ந்த திரு.கணபதி என்பவரின் மகன் திரு.ஜி.சுப்ரமணியன் மற்றும் அரியலூர் மாவட்டம், கார்குடியைச் சேர்ந்த திரு.சின்னையன் என்பவரின் மகன் திரு.சி.சிவசந்திரன் ஆகிய இரண்டு வீரர்கள் உயிரிழந்தனர். இந்திய திருநாட்டின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது, தீவிரவாதிகள் நிகழ்த்திய பயங்கர தாக்குதலில், தமது இன்னுயிரை தியாகம் செய்த, மத்திய பாதுகாப்புப் படைவீரர்கள் திரு.ஜி.சுப்ரமணியன் மற்றும் திரு.சி.சிவசந்திரன் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா இருபது லட்சம் ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 15.2.2019 அன்று உத்தரவிட்டு அத்தொகை உடனடியாக வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மறைந்த மத்திய பாதுகாப்புப் படைவீரர்கள் திரு.ஜி.சுப்ரமணியன் மற்றும் திரு.சி.சிவசந்திரன் ஆகியோரின் குடும்பத்திலுள்ள ஒருவருக்கு அரசு வேலை வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 16.2.2019 அன்று உத்தரவிட்டார்கள். தீவிரவாதிகள் நிகழ்த்திய பயங்கர தாக்குதலில் உயிரிழந்த திரு.ஜி.சுப்ரமணியன் அவர்களின் மனைவி

திருமதி கிருஷ்ணவேணி அவர்களுக்கும், திரு.சி.சிவசந்திரன் அவர்களின் மனைவி திருமதி காந்திமதி அவர்களுக்கும் கருணை அடிப்படையில் அரசு வேலைக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.கடம்பூர் ராஜூ, அரசு தலைமைக் கொறடா திரு.எஸ். இராஜேந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., பொதுத்துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) முனைவர் பி.செந்தில் குமார், இ.ஆ.ப., தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., பொதுத் துறை துணைச் செயலாளர் (மரபு) திரு.டி. மோகன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 27.2.2019**